https://puthusudar.lk/ puthusudar / புதுசுடர்

# புதுசுடர்

உண்மைக்கே முதலிடம்

21TH APRIL 2024 | WWW.PUTHUSUDAR.LK | SUNDAY | ISSUE: 76





# சு.கவை கைப்பற்ற மும்முனைப் போட்டி



ஸ்ரீலங்கா சுதந்திர கட்சிக்குள் எழுந்திருக்கும் பிரச்சினை காரணமாக அக்கட்சியைக் கைப்பற்றுவதற்கு மூன்று தரப்பினர் களத்தில் இறங்கியுள்ளனர் என்று அறிய முடிகிறது.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க தலைமையிலான குழு,தயாசிறி ஜயசேகர தலைமையிலான குழு மற்றும் மைத்திரிபால சிறிசேன தலைமையிலான குழுவே இந்த முயற்சியில் ஈடுபட்டு வருகிறது என்று தகவல்கள் கூறுகின்றன.

மஹிந்த அமரவீர,துமிந்த திஸாநாயக்க மற்றும் லசந்த அழகியவண்ண ஆகியோர் அரசோடு இணைந்து நிற்பதன் காரணமாக அவர்கள் மூவரும் சு.கவில்

02

# கிழக்கின் ஆளுநராக நஸீர் அஹமட்



முன்னாள் இராஜாங்க அமைச்சர் ஹபீஸ் நசீர் அஹம்மட்டை கிழக்கு மாகாண ஆளுநராக நியமிப்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க முடிவெடுத்துள்ளார் என்று ஜனாதிபதி தரப்பு வட்டாரம் தெரிவிக்கிறது.

இதற்கு வசதியாக கிழக்கின் தற்போதைய ஆளுநர் செந்தில் தொண்டமான் ஊவா மாகாண ஆளுநராக நியப்படவுள்ளார் என்றும் அந்தத் தகவல் மேலும் தெரிவிக்கிறது.

நசீர் அஹமட் 2012 இல் இடம்பெற்ற கிழக்கு மாகாண சபைக்கான தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்று கிழக்கு

02

# ஈரான்–இஸ்ரேல் போர்: இலங்கைக்கும் பாதிப்பு

ஈரான் மற்றும் இஸ்ரேல் ஆகிய நாடுகளுக்கிடையிலான போர் உக்கிரமடைந்தால் அது இலங்கைக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

குறிப்பாக,எரிபொருள் விலை உயரும்.இலங்கை எரிபொருள் கொள்வனவு செய்கின்ற அதிகமான நாடுகளுக்கு எரிபொருள் விநியோகிப்பது ஈரான்தான்.

ஈரானின் 90 வீத எரிபொருள் ஏற்றுமதி சீனாவுக்கானதாகும்.அதேபோல்,இந்தியா மற்றும் ஜப்பானுக்கும் கணிசமான அளவு ஏற்றுமதி செய்கிறது.

சீனா மற்றும் இந்தியா ஆகிய நாடுகளிடம் இருந்து இலங்கை

02

# ஈரான் புலனாய்வு அதிகாரிகள் இலங்கையில்:
## அந்நாட்டு ஜனாதிபதியின் வருகை நிச்சயமில்லை



ஈரான்–இஸ்ரேல் சண்டை தொடங்கியுள்ள நிலையில் ஈரான் ஜனாதிபதி வருவது பாதுகாப்பானதா என்று ஆராய்வதற்காக ஈரானின் புலனாய்வு அதிகாரிகள் இலங்கைக்கு வந்துள்ளனர் என்று அறிய முடிகிறது.

ஈரானின் நிதி உதவியிலான உமா ஓயா திட்டம் 24 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது.அதை ஆரம்பித்து வைப்பதற்காக ஈரான் ஜனாதிபதிக்கு இலங்கை அரசால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளபோதிலும் ஈரான் ஜனாதிபதியிடம் இருந்து இன்னும் பதில்

02




புது சுடர்
www.puthusudar.lk
2024 APRIL 21 - SUNDAY

# ஈடுசெய்ய முடியாத இழப்பு

அரசியல் தலைவர்கள் தோன்றுவதும் மறைவதும் வழமையான விடயம். அப்படித் தோன்றியவர்கள் மறையும்போது அவர்களின் இழப்பை ஈடு செய்ய முடியாது என்று சொல்வதுண்டு.

அதற்கு அவர்கள் தகுதியானவர்களா ,இல்லையா என்று பார்த்து அப்படிச் சொல்வதில்லை.அவர்களுக்கு இறுதி கௌரவம் வழங்க வேண்டும் என்பதற்காகவே அவ்வாறு சொல்வர்.

உண்மையில் இந்த வசனத்துக்குத் தகுதியானவர்கள் ஒரு சிலர் மாத்திரம்தான்.அவ்வாறானவர்களுள் மறைந்த முன்னாள் பிரதி அமைச்சர் பாலித தேவரப்பெருமவும் ஒருவர்.

மக்களோடு மக்களாக வாழ்ந்தார்,மக்களுக்காகவே வாழ்ந்தார்,மக்களுக்கு சேவை செய்தார்.இனவாதத்துக்கு எதிராக நின்றார்.அனைத்து இனங்களையும் அரவணைத்துப் போனார் என்றெல்லாம் சொல்லப்படுவது இவருக்குத்தான் நூறு வீதம் பொருந்தும்.

பணம் சம்பாதிப்பதற்காகவே அரசியலுக்கு வரும் இந்தக் காலகட்டத்தில் பணத்தைத் தூக்கி வீசிவிட்டு மக்களுக்காக மாத்திரமே அரசியலுக்கு வந்த சிறந்த தலைவன்.

மக்களுக்கு ஒரு பிரச்சினை என்றால் அந்த இடத்தில் பாலிதவைக் காணலாம்.தான் ஒரு பௌத்தனாக இருந்தபோதிலும்,சிறு துளிகூட இனவாதம் இல்லாத மனிதன்.

அவரது மாவட்டத்தில் எங்கெல்லாம் தமிழ்,முஸ்லிம் மக்களுக்கு எதிராக பேரினவாதம் கிளம்புகிறதோ அதை அடக்குவதற்காக அங்கெல்லாம் அவர் நிற்பார்.

பாலித பிரபல்யமடைந்ததே முஸ்லிம்களுக்கு எதிரான அளுத்கம-தர்காநகர் கலவரத்தின்போதுதான். அந்தக் கலவரத்தில் சிக்கிக்கொண்ட முஸ்லிம் குடும்பம் ஒன்றை தன் உயிரைக் கொடுத்துக் காப்பாற்றினார். அதற்காக அவர் பேரினவாதிகளிடம் இருந்து கடுமையான தாக்குதலுக்கு உள்ளானார்.

அந்த அடிகளையும் உதைகளையும் வாங்கித்தான் அந்த முஸ்லிம் குடும்பத்தைக் காப்பாற்றினார் பாலித.இல்லையென்றால்,அந்தக் குடும்பத்தைக் கொன்றிருப்பார்கள் பேரினவாதிகள்.

அன்று எல்லா அரசியல்வாதிகளும் கைகட்டி பார்த்திருக்க பாலித மட்டும் துணிந்து களமிறங்கினார். உண்மையில் அன்றுதான் அவரது உயிர் பிரிந்திருக்க வேண்டும். அந்தளவுக்கு அவரைத் தாக்கினார்கள் அந்தக் காடையர்கள்.

அதன் பின்னராவது அவர் அஞ்சினாரா? இந்தப் பணியில் இருந்து ஒதுங்கினாரா? இல்லை.அதன் பிறகும் எத்தனையோ சம்பவங்கள். மதுகமவில் இந்து கோவிலுக்கு எதிராக பேரினவாதம் கிளம்பியபோது அதை அடக்கி அந்த கோவிலைப் பாதுகாத்ததே இந்த உத்தமன்தான்.

தெற்கில் வெள்ள அனர்த்தம் வந்தபோது மக்களை பாதுகாப்பதிலும் அவர்களின் பசியை ஆற்றுவதிலும் அவர் ஆற்றிய பங்கு அளப்பெரியது. மக்களோடு மக்களாக நின்று அவர் பட்ட கஷ்டத்தை நாம் கண்டோம்.

அடிப்படையில் அவர் சண்டியன். அந்த சண்டித்தனம் அடுத்தவைக் கொல்வதற்கும் தாக்குவதற்கும் அல்ல. மக்களுக்கு சேவை செய்வதற்காக.

அரச அதிகாரிகளால் மக்களுக்கான சேவைகள் மறுக்கப்பட்ட சந்தர்ப்பங்களில் எல்லாம் அவர் அந்த சண்டித்தனத்தைப் பாவித்துத்தான் அந்த சேவைகளை பெற்றுக்கொடுத்தார்.

மக்களின் சேவைகளை மறுக்கிற-ஊழல்மிக்க அதிகாரிகளிடம் இருந்து சேவையைப் பெற்றுக்கொடுக்க இதுதான் வழி என்று காட்டினார் பாலித.

அவர் இரண்டு தடவைகள் எம்பியாக இருந்தார்,பிரதி அமைச்சராக இருந்தார்.அந்தப் பதவிகளை வைத்து ஏனைய அரசியல்வாதிகள்போல் பணம் சம்பாதிக்கவில்லை. ஊழல் புரியவில்லை.மக்களுக்கு சேவை செய்வதற்காகவே அதைப் பயன்படுத்தினார்.

2015 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதில்லை என்று அவர் முடிவெடுத்தார். காரணம் தேர்தலுக்கு பணமில்லை. ஆனால்,மக்கள் விடவில்லை. அவர்களே பணம் செலவழித்து வெல்ல வைத்தனர்.

மக்களிடம் வாக்குக் கேட்டு அரசியல்வாதிகள்தான் பணம் செலவழிப்பார்கள்.ஆனால்,மக்களே பணம் செலவழித்து ஓர் அரசியல்வாதியை வெல்ல வைக்கும் அளவுக்கு அவர் மக்களின் மனங்களை கொள்ளையடித்திருந்தார்.

அவர் இறைவனிடம் கேட்டதெல்லாம் மக்களுக்கு சேவை செய்வதற்கான உடல் பலத்தைத்தான்.பணத்தை அல்ல.

அப்படிப்பட்ட உன்னதமான மனிதனைத்தான் நாம் இன்று இழந்து நிற்கிறோம்.அவரது இழப்பு என்றுமே ஈடுசெய்ய முடியவே முடியாது.

# சட்டத்துறையில்; வரலாற்றுத் தடயத்துடன் விடைபெற்றார் நீதியரசர் அமீர் இஸ்மாயில்!

## துறையூரின் ஈடுசெய்ய முடியாத இடைவெளி!!

### சம்மாந்துறை மீடியா போரத்தின் அனுதாபச் செய்தி!!

(கியாஸ் ஏ. புஹாரி)

சம்மாந்துறையின் முதுசம்மிக்க இலட்சினையான உயர் நீதிமன்ற நீதியரசர் அமீர் இஸ்மாயில் தனது 85 வது வயதில் இன்று காலமானார். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன். அன்னார் மறைந்த செய்தி (20.04.2024) எமது சமூகத்தின் புத்திஜீவிகள் வரிசையில் பெரும் வெற்றிடத்தை ஏற்படுத்தியுள்ளது.

கிழக்கிலங்கை வரலாற்றில் முதலாவது நீதியரசரான இவர் சம்மாந்துறை மண் பெற்றெடுத்து இன்று இழந்துள்ள அறிவுச் சுரங்கம் ஆவார்.

அன்னாரின் மரணச் செய்தி வரலாற்றுத் தடயத்தை இட்டுச் சென்றுள்ளது என்ற ஆழ்ந்த இரங்கலுடன், தனது பிரார்த்தனைகளையும், அனுதாபங்களையும் சம்மாந்துறை மீடியா போரம் தெரிவித்துக் கொள்கின்றது.

1939ஆம் ஆண்டு பெப்ரவரி 19ஆம் திகதி சம்மாந்துறையில் பிறந்த இவர் தனது ஆரம்ப கல்வியை சம்மாந்துறை தாறுல் உலூம் வித்தியாலத்திலும் உயர் கல்வியை கொழும்பு உவெஸ்லி கல்லூரியிலும் தொடர்ந்தார்.

பாடசாலைக் கல்வியின் பிற்பாடு சில காலங்கள் கொழும்பிலுள்ள உயர் கல்லூரியொன்றில் ஆசிரியராக கடமையாற்றிய பின்னர் சட்டக்கல்வியை தொடர்ந்ததுடன் 1967 இல் இலங்கை சட்டக் கல்லூரியின் சட்டத்தரணி கற்கையை பூர்த்தி செய்துவிட்டு அதே ஆண்டில் உயர்நீதி மன்றத்தின் சட்டத்தரணியாகிறார்.

சம்மாந்துறையில் 1930 களில் பெயர் பூத்த பொறியியலாளராக திகழ்ந்த மர்ஹூம் இஸ்மாயில் என்ஜினியரின் இரண்டாவது மகனான இவராது கல்விப் பரப்பானது தகப்பன் வழிவென்ற சாதனைச் சிகரம் என்றுதான் சொல்ல வேண்டும்.

தியாகம், நேர்மை, கடமையுணர்வு, சமூக அக்கறை போன்ற பலதையும் அகத்தில் கொண்ட இஸ்மாயில் என்ஜினியர் 1930 களில் டீ.எஸ். சேனாநாயக்க ஆட்சிக் காலத்தில் உடைந்திருந்த பராக்கிரம சமுத்திரத்தை மீள திருத்தியமைககும் பாரிய பணியை பொறுப்பேற்று முழு முஸ்லிம் சமூகத்தினருக்கும் சான்று படைத்தார்.

நீர்ப்பாசனப் பொறியியலாளரான இஸ்மாயில் எனும் ஆளுமையான அவர் முஸ்லிம் சமூகத்தின் வரலாற்றுத் தடயத்தை சான்றூன்றினார். (இந்தத் தகவல் பொலன்னறுவ நீர்ப்பாசன அலுவலகத்தின் பதிவுப் புத்தகத்தில் உள்ளது.)

-இவ்வாறு ஆளுமை கொண்ட பொறியியலாளர் இஸ்மாயில் அவர்களின் இளைய மகனாகிய நீதியரசர் அமீர் இஸ்மாயில்,

குறுகிய கால பயிற்சியின் பின்னர் 1971 இல் இலங்கை சட்டமா அதிபர் திணைக்களத்தில் அரச ஆலோசகராக இணைந்தார். 12 ஆண்டுகள் அரச வழக்கறிஞராகவும், சிரேஷ்ட அரச வழக்கறிஞராகவும் பணியாற்றி விட்டு பின்னர் 1983 ஆம் ஆண்டு உயர்நீதிமன்ற நீதிபதியாக நீதித்துறையில் உள்வாங்கப்பட்டார்.

மேலும், 1983 இல் நெதர்லாந்தின் ருவசநஉாவ பல்கலைக்கழகத்தில் சர்வதேச விமானச் சட்டம் டிப்ளோமா பெற்றுள்ளதுடன், 1998 இல் கலிபோர்னியா பல்கலைக்கழகத்தில் உள்ள சட்ட அமைப்புகளின் ஆய்வு மற்றும் மேம்பாட்டிற்கான நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட முரண்பாடு தீர்த்தல் சட்டப் படிப்பையும் தொடர்ந்திருந்தார்.

உயர் நீதிமன்றத்தின் நீதிபதியாகப் பல்வேறு நிலையங்களில் பணியாற்றிய பின்னர், 1990 இல் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதியாகப் பதவி உயர்வு பெற்றார்.

தொடர்ந்தும் அவர் 1990 இல் இலங்கையின் உச்ச நீதிமன்றத்தின் நீதிபதியாக உயர்வு பெற்றார். அவர் உச்ச



நீதிமன்ற நீதிபதியாக இருந்த காலத்தில் நீதிச் சேவை ஆணைக்குழுவின் உறுப்பினராக பணியாற்றியதுடன், சட்டக் கல்விப் பேரவை உறுப்பினராகவும் நியமிக்கப்பட்டு உச்ச அடைவுகளைப் பெற்று சேவையாற்றி ஓய்வு பெற்றார்.

நீதியரசராக இருந்து ஓய்வுபெற்றதன் பின்னர் 2005 - 2010 காலப் பகுதியில் அரசியலமைப்புச் சபையின் பரிந்துரையின் பேரில் ஐந்து ஆண்டுகளுக்கு இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிப்பதற்கான ஆணைக்குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டார்.

இவ்வாறு தனது இள வயது முதல் கல்விப் பரப்பில் விசாலமாகியிருந்து அறிவின் கூர்மையான நீதியரசர் மர்ஹூம் அமீர் இஸ்மாயில் சம்மாந்துறை மண் பதியினதும், எமது சமூகத்தினதும் வரலாற்றுத் தடயத்தை விட்டுச் செல்லும் அன்னாரின் மறுமை வாழ்வு சிறப்புற பிரார்த்திப்பதுடன், வல்லநாயன் அன்னாருக்கு உயர் ஜென்னாஹ்வை பரிசளிப்பானாக என்றும் பிரார்த்திக்கின்றோம்.

## ஈரான்...

முன்பக்கத் தொடர்ச்சி...)

கிடைக்கவில்லை என்று வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

இலங்கை வந்துள்ள ஈரான் புலனாய்வு அதிகாரிகளின் அறிக்கையை அடிப்படையாக வைத்தே ஈரான் ஜனாதிபதியின் வருகை முடிவு செய்யப்படும் என்று ஈரான் தூதரக வட்டாரம் தெரிவிக்கிறது.

## சு.க...

முன்பக்கத் தொடர்ச்சி...)

**வந்த பதவிகளில் இருந்து மைத்திரிபால சிறிசேன அவர்களை நீக்கினார்.**

**இதற்கு எதிராக அவர்கள் நீதிமன்றம் சென்றனர்.மைத்திரிபால கட்சியின் தலைவராக பதவி வகிப்பதற்கு நீதிமன்றம் இடைக்கால தடை விதித்தது.**

**அவர்கள் மூவரும் சந்திரிகாவின் விசுவாசிகள் சந்திரிக்காவே கட்சியின் தலைவராக வர வேண்டும் என்று பாடுபடுகிறார்கள்.**

**அதேபோல்,சு.கவின் பொது செயலாளர் பதவியில் இருந்து மைத்திரியால் நீக்கப்பட்ட தயாசிறி தயசேகர இந்த சந்தர்ப்பதை பயன்படுத்தி கட்சிக்குள் இருக்கும் அவரது விசுவாசிகளுடன் இணைந்துகொண்டு கட்சியின் தலைமைத்துவத்தைக் கைப்பற்றுவதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறார் என்று அறிய முடிகிறது.**

**அதேபோல்,நீதிமன்ற தடை நீங்கியதும் மைத்திரியே மீண்டும் தலைவராக வருவார். அந்தத் தலைவர் பதவியைத் தக்கவைத்துக்கொள்வதற்காக மைத்திரி தரப்பு வியூகம் வகுத்து வருவதையும் அறிய முடிகிறது.**

**இவ்வாறு மூன்று தரப்பினர் சு.கவைக் கைப்பற்றுவதற்கு கடும் முயற்சியில் ஈடுபட்டுள்ளமையைக் காண முடிகிறது.**

## கிழக்கின்...

முன்பக்கத் தொடர்ச்சி...)

மாகாண சபைக்குள் நுழைந்தார். கிழக்கின் முதலமைச்சராக பதவி வகித்தார்.

2020 நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்று நாடாளுமன்றம் நுழைந்த அவர் மொட்டு அரசுடன் இணைந்து இராஜாங்க அமைச்சரானார். இதன் காரணமாக அவரது கட்சியான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அவரை எம்பி பதவியில் இருந்து நீக்கியது.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் கிழக்கு முஸ்லிம்களின் ஆதரவு தனக்குத் தேவை என்பதால் நசீர் அஹம்மட்டை கிழக்கின் ஆளுநராக நியமிப்பதற்கு ஜனாதிபதி தீர்மானித்துள்ளார் என்று அறிய முடிகிறது.

## ஈரான்-இஸ்ரேல்...

முன்பக்கத் தொடர்ச்சி...)


எரிபொருளை கொள்வனது செய்கின்றமையால்

எரிபொருள் சிக்கல் இலங்கைக்கு ஏற்படுவதற்கு வாய்ப்புண்டு என்று அந்த ஆய்வாளர்கள் கூறுகிறார்கள்.

அதேபோல் ஈரானுக்கான இலங்கையின் ஏற்றுமதி வர்த்தகமும் பாதிக்கப்படும் ஆபத்து உள்ளது.

# ஆட்டம் காணும் மஹிந்தவின் அரசியல் எதிர்காலம்

தொடர் - 03



சின்னத்தம்பி குருபரன்



இனி மஹிந்த ராஜபக்ஷவும், அவர் குடும்பத்தினரும், அவரைச் சார்ந்தவர்களும், படையினரும் 2015 ஜனாதிபதித் தேர்தலின் தோல்விக்கு எவ்வாறு காரணமானார்கள் என்பதை நோக்குவோம்.

1. மஹிந்த ராஜபக்ஷ சிறுபான்மையினர் தொடர்பாக கடைப்பிடித்து வந்த இனவாத, பேரினவாதக் கொள்கைகள்.

2. இறுதி யுத்த காலங்களில் தான் பிறப்பித்த கட்டளைகளும், கடைப்பிடித்த கொள்கைகளும்.

3. இறுதி யுத்தம் முடிவிற்கு வருவதற்கு ஆயுதம், தளபாடம், உபகரணங்கள், தொழினுட்ப உதவிகள், படைப்பல உதவிகள், ஆலோசனைகள் வழங்கி பக்கபலமாக இருந்த சோனியா காந்தி (இந்திய காங்கிரஸ்) அரசையும், அமெரிக்கா போன்ற நாடுகளையும் புறந்தள்ளிக் கொண்டு சீனா, பாக்கிஸ்தான் பக்கம் சார்ந்து நின்று சீனாவின் முத்துமாலைத்திட்டத்தினுடாக இந்தியாவின் பாதுகாப்பிற்குப் பங்கம் விளைவிக்க முற்பட்டமை. இதனால் வல்லரசு நாடுகளும், இந்தியாவும் ஆட்சி மாற்றத்தை விரும்பியமை.

4. இறுதி யுத்தத்தின்போது நிகழ்ந்த மனித உரிமை மீறல்கள்.

5. மஹிந்தவின் ஆட்சி நீடித்தால் கேணல் கடாபி, கொஸ்னி முபாரக், சதாம் ஹீசைன், ரோபர்ட் முகாவே, பிடல் கஸ்ரோ, அலி அக்பர் ஹன்சன்யானி ஆகியோர் போன்று மேற்குலகத்திற்குச் சவால் விடுகின்ற தலைவராக உருவாகிவிடலாம் என நம்பி ஆட்சி மாற்றத்திலே குறியாக இருந்தமை.

6. மாகாண அரசுகளின் அதிகாரங்களைப் பல திருத்தச் சட்டமூலங்கள் ஊடாகப் பறிக்கப்பட்டமை.

7. யாப்பின் 18, 19 ஊடாகத் திருத்தங்களைச் செய்து தமக்குச் சாதகமான சட்ட மூலங்களை உருவாக்கியமை.

8. இறுதி யுத்தத்தின்போது நிகழ்ந்த மனித உரிமை மீறல், யுத்தக் குற்றங்கள் தொடர்பாக உள்ளக விசாரனைப் பொறிமுறை ஒன்றுக்கும், குறைந்த பட்சம் கற்றுத்தந்த பாடங்கள் நல்லினக்க ஆணைக்குழுவின் அறிக்கையைத் தானும் நடைமுறைப்படுத்த எந்தவித பூர்வாங்க நடவடிக்கையும் மேற்கொள்ளாது தட்டிக் கழித்ததோடு ஐக்கிய நாடுகள் மனித உரிமைச் சமவாயத்தின் செயற்பாடுகளில் குறைகூறிக் கொண்டு அவர்களுக்குப் புலிச்சாயம் பூசி முரண்டு பிடித்தமை.

9. தமிழர் தாயகப் பிரதேசங்களில் திட்டமிடப்பட்ட குடியேற்றம்.

10. தமிழ், முஸ்லிம் மக்களின் பூர்வீக காணிகள் திட்டமிட்டுப் பறிக்கப்பட்டமை.

11. யுத்தம் முடிந்த பின்னரும் கெடுபிடிகளைத் தளர்த்தாது வடக்கு, கிழக்குப் பிரதேசங்களை இராணுவ ஆக்கிரமிப்புடன் வைத்திருந்தமை.

12. உயர் பாதுகாப்புப் பிரதேசமெனக் கூறித் தமிழர்களின் பெருமளவு காணிகள் கபளீகரம் செய்யப்பட்டதோடு, அப்பிதேசங்களில் மக்களை மீளக் குடியமர்த்த மறுத்தமை.

13. சகல துறைகளிலும் இராணுவத் தலையீட்டை ஊக்குவித்தமை.

14. முப்படையினர் செய்யும் தவறுகளையும், ஆக்கிரமிப்புக்களையும் கண்டும் காணாமல் இருந்தமை.

15. பாதுகாப்புச் செயலாளர், பாதுகாப்பு அமைச்சர் போல் செயற்பட்டது மட்டுமல்லாது சகல துறைகளிலும் தலையிட்டமை.

16. தமிழர் பிரதேசங்களில் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட காணிச் சுவிகரிப்புக்களை ஊக்குவித்தமை.

17. வடக்குக் கிழக்கு மாகாணங்களில் மாத்திரம் தமது தேவைகளை நிறைவு செய்வதற்கு படைத்துறை சார்ந்த அதிகாரிகளை ஆளுனர்களாகவும், அரசாங்க அதிபர்களாகவும் நியமித்துத் தமது எண்ணங்களை நிறைவேற்றியமை.

18. வடமாகாண அரசின் நியாயமான நிர்வாகச் செயற்பாடுகளுக்குத் தடையாக இருந்ததோடு ஆளுனரும், பிரதம செயலாளரும் குட்டி ஜனாதிபதி போல் செயற்பட ஊக்குவித்தமை.

19. மீளக்குடியமர்த்தப்பட்டவர்களுக்கு உரிய அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்படாமல் அவர்களைத் தொடர்ச்சியாகக் கண்காணித்ததோடு, அவர்களை நிர்க்கதி நிலைக்கு இட்டுச் சென்றமை.

20. தமிழர் பிரதேசங்களில் தொழில் செய்யவும், மீன் பிடிக்கவும், கொந்துராத்து வேலை செய்யவும், கட்டுமானப்பணிகளிலும் படையினரின் ஆதரவுடன் பெரும்பான்மையினரை அனுமதித்தமை.

21. வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் திட்டமிட்டுக் கலாசாரப் பாரம்பரியங்களைச் சீரழித்தமை (போதைப் பொருள் பாவனை, மதுபானம், பாலியல் வல்லுறவு, கொள்ளைகள், வாள் வெட்டுக் வெட்டுக் குத்துக்கள் என்பவற்றைக் கண்டும் காணாததுபோல் செயற்பட்டமை).

22. 2009 இறுதி யுத்தத்தின் பின்னர் வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் 75 க்கு மேற்பட்ட மதுபானசாலைகளைத் தாபித்ததோடு, கடற்கரைப்பிரதேசங்களிலும், பிரதான நகரங்களிலும், உல்லாசப்பயண விடுதிகளைத் தாபித்தமை (இவ்விடுதிகள் சிலவற்றில் பல இளம் யுவதிகள் விபச்சாரத்திற்குப் பயன்படுத்தப்பட்டமையும் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன.)

23. அண்மைக் காலங்களில் வடக்கு, கிழக்குப் பல்கலைக்கழகங்களில் ஏற்பட்ட கலவரங்களுக்கும் பெரும்பான்மை இனமாணவர்களின் அடாவடித்தனங்களுக்கும் பொலிசாரும், பாதுகாப்புப் படையினரும் துணைபோனமை.

24. யுத்த வடுக்கள் ஒருபுறம் இருக்க இறுதியுத்தத்தில் இறந்து போன சாதாரண மக்களின் (வீடுகளில்) அஞ்சலியைக் கூடச் செய்யவிடாமல் தடுத்ததோடு, செய்தவர்கள் தண்டிக்கப்பட்டமை.

25. அமைச்சர்களும், பிரதி அமைச்சார்களும், உயர் அதிகாரிகளும் புலனாய்வுப் பிரிவினரால் கண்காணிக்கப்பட்டதோடு ஒவ்வொருவருக்கும் தனித்தனியாகக் கோவைகள் உருவாக்கியமை. இது தபால் மூல வாக்களிப்பில் செல்வாக்குச் செலுத்தியதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

26. பொருளாதார அபிவிருத்தி அமைச்சும், பாதுகாப்பு அமைச்சுச் செயலாளரும் சகல அமைச்சுக்களின் செயறடபாடுகளிலும் மாவட்ட அபிவிருத்திச் செயற்பாடுகளிலும் தலையிட்டமை, மந்திரிசபையின் தனித்துவம், பரஸ்பர நம்பிக்கை குறைக்கப்படடிருந்தமை.

27. பொதுப் பலசேனா செய்த அடாவடித்தனங்களையும், போராட்டங்களையும், ஊர்வலங்களையும், கலவரங்களையும் கண்டும் காணாதவர்கள்போல் செயற்பட்டமை.

28. கொழும்பிலும் சில பிற மாவட்டங்களிலும் நகர அபிவிருத்தி என்ற போர்வையில் பல அப்பாவி மக்களின் வாழ்வாதாரம் பறிக்கப்பட்டமை.

29. ஊழலும், சர்வாதிகாரமும் நிறைந்த ஆட்சியாகப் பலரும் வர்ணித்தமை.

30. அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றம்.

31. யுத்த வெற்றியும், இனவாதமும் பெரும்பான்மையினர் மத்தியில் புளித்துப்போன ஒன்றாக மாறியமை.

32. பல அமைச்சர்களும், பிரதி அமைச்சர்களும், அரச பாராளுமன்ற உறுப்பினர்களும், உயர் அதிகாரிகளும், பாதுகாப்புப்படை அதிகாரிகளும் சொத்துக்குவிப்பிலும், ஊழல்களிலும் ஈடுபட்டபோதும் வடக்குக் கிழக்கில் உல்லாசப் பிரயாணிகளைக் கவரக்கூடிய காணிகள் பலவற்றை அபகரித்ததைக் கண்டும் காணாதிருந்தமை.

33. குடும்ப ஆட்சியின் ஊடாக பாராளுமன்றத்திலும், வெளியிலும் பலரும் கண்காணிக்கப்பட்டமை.

34. ஹம்பாந்தோட்டையில் செய்யப்பட்ட அபிவிருத்திப் பணிகளின் தோல்வி (விமான நிலையம், துறைமுகம், சர்வதேச கிறிக்கெற் மைதானம், பாதை புனரமைப்பு, மற்றும் கட்டுமானங்கள்)

35. கதிர்காமத் தலத்தின் நிர்வாகக் கட்டமைப்பினைத் தமது கட்டுப்பாட்டில் கொண்டு வந்து தமது குடும்பத்தைச் சேர்ந்த ஒருவருக்குத் தியவதன நிலமே பதவி வழங்கப்பட்டமை. இது 2014 ஊவா மாகாண சபைத் தேர்தலில் 2015 ஜனாதிபதித் தேர்தலிலும் வாக்குச்சரிவைக் காட்டியது.

36. பெரும்பாலான அபிவிருத்திப் பணிகளிலும் பல அத்தியவசியப் பொருளிலும், விற்பனையிலும், காணிக் கைமாறல்களிலும் தரகுகள் பெறப்பட்டமை.

37. ஜனாதிபதித் தேர்தல் இறுதிக்கட்டப் பிரசாரங்களில் இனவாதம் கட்டவிழ்த்து விடப்பட்டமை.

38. தமது ஆட்சியில் பல அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாண, உள்ளுராட்சிச் சபை உறுப்பினர்கள், வெறுப்புற்றிருந்தனர் என்பதை ஊகித்துணரத் தவறியமை இந்த விடயத்தை மஹிந்தவுக்கு நெருங்கிய சகாக்களும் எடுத்துக் கூற முற்படாமை.

39. 2014 நவம்பர், டிசெம்பரில் மைத்திரிபால சிறிசேன உட்படப் பல அமைச்சர்களும், பாராளுமன்ற உறுப்பிணர்களும், மாகாணசபை ஊறுப்பிணர்களும், முதலமைச்சர்களும், பிரதேச சபை உறுப்பணர்களும் ஆளுங்கட்சியில் இருந்து விலகி புதிய ஜனநாயக முன்னனியைத் (பொது எதிரணி) தாபித்து அதில் இணைந்து கொண்டதோடு ஜனாதிபதி லேட்பாளராக மைத்திரிபால சிறிசேனவும் நிறுத்தப்பட்டமையினால் தமது தோல்வி உறுதியாகிவிட்டது என்ாதை உணரத்தவறியமை.

40. தேர்தல் தினத்தை தீர்மானிப்பதிலும், தேர்தல் பிரச்சாரத்திற்குச் செல்லும்போதும், மெதமுலனவில் உள்ள வாக்களிப்பு நிலையத்திற்குச் செல்வதற்கான நேரத்தைத் தீர்மானிப்பதிலும் சோதிடத்தை நம்பி முன்னுரிமையளித்தமை.

41. 31 டிசெம்பர் 2014 இல் அலறி மாளிகையில் நிகழ்ந்த பத்திரிக்கையாளர் சந்திப்பில் தனது தோல்வியை உணர்ந்து நாசுக்காகக் கூறி இருந்தும் அதனை ஏற்றுக்கொள்ளத்தவறியமை.

42. இந்தியா மற்றும் மேலைத்தேச நாடுகளும், அதன் தூதரகங்களும் ஆட்சிமாற்றத்தில் கவனமெடுத்துச் செயற்பட்டுக் கொண்டிருப்பதனை பொருட்டாகக் கொள்ளாமை.

43. சில அமைச்சர்களும், பிரதி அமைச்சர்களும், மாகாணசபை, உள்ளுராட்சி சபை உறுப்பினர் செய்த அடாவடித்தனங்களும், பிரசாரத்தின்போது வெளிக்காட்டிய இனத் துவேசமும் தோல்விக்கு ஒரு காரணமாக அமைந்தன.

44. கொஸ்லாந்தை, அறநாயக்க ஆகிய இடங்களில் ஏற்பட்ட மண்சரிவில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய வேளையில் நிவாரணங்கள் பெற்றுக் கொடுக்கத் தவறியமை.

45. தோட்டத் தொழிலாளர் காங்கிரஸ ின் மீது மக்களின் ஆதரவு குறைந்தமையும், நம்பிக்கை ஈனமும்.

46. இறுதி வேளையில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசும் மைத்திரிபால சிறிசேனாவுக்கு ஆதரவு வழங்குவதாகக் கூறிப் பிரச்சாரத்தில் ஈடுபட்டமை.

47. ஏனைய மதங்களைப் புறக்கணித்துப் பௌத்த மதத்திற்குக் கொடுத்த முன்னுரிமை.

48. பல்லின, பல்மத பல்கலாசாரம் கொண்ட நாடு என்பதை முழுமையாக ஏற்கத் தவறியமை.

49. யுத்த வடுக்களினால் ஏற்பட்ட புண்ணுக்கு பரிகாரம் தேடுவதைவிடுத்துப் பாதை அமைப்பதும், கட்டடம் கட்டித் திறப்பதும், நகர அபிவிருத்தியும்தான் அபிவிருத்தி என நம்பி ஊழல், மோசடிகளில் ஈடுபட்டமை.

50. செய்ததும், செய்வதும், செய்ய இருப்பவை யாவும் மகிந்த சிந்தனை என இறுமாப்புக் கொண்டு தம்பட்டமடித்தமை. இவை பாராளுமன்றம், மாகாண அரசு, உள்ளுராட்சிச் சபைகளின் அதிகாரங்களைக் மட்டுப்படுத்துவதாக அமைந்தன.

51. தமது சகாக்கள் மீதும், நெருங்கிய உறவினர்களினதும், குடும்ப உறுப்பினர்களின் நடவடிக்கைகள் மீது கவனமெடுக்கத்தவறியமை.

52. இவற்றுக்கெல்லாம் சிகரம் வைத்தால்போல் அமைந்தது. கடந்த மூன்று வருடங்களாகச் சிறுபான்மையினரின் வாழ்வியல், சமய, கலாசார உரிமைகளுக்கு எதிராகவும், சிறுபான்மையினருக்கு எதிராகவும், பொதுப் பலசேனா, தேசப் பற்றுள்ள தேசிய முன்னணி, ராவணா அமைப்பு, நவ ஹெல உறுமய போன்ற அமைப்புக்களினால் சமய வழிபாட்டுச் சுதந்திரத்துக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறையும், இந்து ஆலயங்கள், பள்ளிவாசல்கள், கிறிஸ்தவ தேவாலயங்கள் பல இடித்து அழிக்கப்பட்டமையும், சொத்துக்கள் சூரையாடப்பட்டமையும், சிறுபான்மையினர் மத்தியில் அரசுக்கு எதிராகப் பாரிய நம்பிக்கையீனத்தை ஏற்படுத்தின.

கீழைத் தேச மக்கள் மதத்தினையும், வழிபாட்டுத் தலங்களையும், உயிரினும் மேலாக, உணர்வு பூர்வமாக மதிப்பவர்கள் என்பதை உணரத்தவறியமையினால் சிறுபான்மை மக்களின் கட்சிகள் கூடித் தீர்மானிப்பதற்கு முன்னரே தாம் ஜனாதிபதித் தேர்தலில் யாருக்கு வாக்களிப்பது என்பதை முன்கூட்டியே தீர்மானித்திருந்தனர்.

ஆதனால் சிறுபான்மை அரசியல் தலைவர்கள் "பலர் விழுந்தும் மண் ஒட்டாததுபோல்" தமது பின்னடைவைக் காட்டிக்கொள்ளாது தாம் மைத்திரிக்கு ஆதரவு வழங்குவதாகத் தெரிவித்து நாடகமாடினர்.அவர்களில் பெரும்பாலானோர் புதிய மந்திரிசபையிலும் உள்ளனர்.

(தொடரும்....)



# சஜித்-தமிழ் கூட்டமைப்புக்கு பசில் அனுப்பிய செய்தி

நாடாளுமன்றத் தேர்தலே முதலில் நடத்தப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் பசில் உள்ளார். ஏனைய கட்சிகள் அது தொடர்பில் என்ன நிலைப்பாட்டில் உள்ளன என்று அறிவதற்கு அவருக்கு விருப்பம்.

முதலில் சஜித் தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்திக்கும் தமிழ் தேசிய கூட்டமைப்புக்கும் தூது அனுப்பி நாடாளுமன்றத் தேர்தலை முதலில் நடத்துவதற்கு உங்களுக்கு விருப்பமா என்று வினவியுள்ளார்.

எடுத்த எடுப்பிலேயே ஜனாதிபதி தேர்தல்தான் முதலில் நடத்தப்பட வேண்டும் என்று தூது கொண்டு வந்தவரிடம் செய்தி அனுப்பினார்



# அவருக்குத்தான் கிடைக்கவிருந்தது

மொட்டு கட்சியின் தேசிய அமைப்பாளர் பதவியை பசில் ராஜபக்ச இராஜினாமா செய்ததும் அதற்கு வேறு ஒருவரை நியமிப்பது தொடர்பில் மஹிந்தஇபசில்இகோத்தா மற்றும் சமல் ஆகிய நால்வரும் ஒன்றுகூடி பேசினர்.

அப்போது சிறிது காலத்துக்கு ராஜபக்ச சகோதரர்கள் எந்தவொரு பதவியையும் ஏற்காமல் இருப்பதே நல்லது.ஜேவிபிஇஐக்கிய மக்கள் சக்தி போன்றவை எமக்கு எதிராக இது தொடர்பில் பிரசாரம் செய்து வருகின்றனர்.

அதை முறியடிப்பதற்கு நாம் வேறு ஒருவருக்கு தேசிய அமைப்பாளர் பதவியைக் கொடுப்பதே சரி என்று சமல் ராஜபக்ச கூறினார்.

இதனைத் தொடர்ந்து அமைச்சர்கள் பிரசன்ன ரணதுங்க மற்றும் ரோஹித அபாயவர்தன ஆகியோரின் பெயர்கள் அந்தப் பதவிக்கு பிரேரிக்கப்பட்டன.

பிரசன்ன ரணதுங்க ஆளுங்கட்சியின் பிரதம கொறடாவாக இருப்பதால் தேசிய அமைப்பாளர் பதவியை ஏற்பதற்கு அவர் விரும்பவில்லை.

ஆனால்இரோஹித தேசிய அமைப்பாளர் பதவியை ஏற்பதற்கு விருப்பமாக இருந்தார்.

ஆனால்இஇடையில் புகுந்த மொட்டு கட்சியின் மகளீர் அணி கடும் அழுத்தம் கொடுத்து நாமலை தேசிய அமைப்பாளராக நியமிக்கச் செய்தது.

## துப்பறிவாளன்

# கொண்டாட்டத்தை தவிர்த்த ரணில்



ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் பிறந்த நாள் மார்ச் 24ஆம் திகதியாகும்.ஏனைய அரசியல்வாதிகள்போல் பிறந்த நாள் கொண்டாடி அரசியல் பிரசாரம் செய்பவர் அல்ல அவர்.

அவரது பிறந்த நாளைக் கொண்டாடுவதற்கு அவரது சில விசுவாசிகள் முயற்சி செய்தபோதும் அதற்கு அவர் இடம் கொடுக்கவில்லை.

இதனால் அன்றைய தினம் முழுவதும் ஜனாதிபதி அவரது மனைவியுடன் அவரது உத்தியோகபூர்வ இல்லத்திலேயே இருந்தார்.

அரசியல் தலைவர்கள் அனைவரும் அவருக்குத் தொலைபேசி அழைப்பு எடுத்தும் நேரில் சென்றும் வாழ்த்துத் தெரிவித்தனர்.

யாரெல்லாம் அவருக்குத் தொலைபேசி மூலம் வாழ்த்துத் தெரிவித்தார்களோ அவர்கள் எல்லோருக்கும் திருப்பி எடுத்து நன்றி தெரிவித்தார்.

இதற்காகவே அவரது பாதுகாப்பு பிரிவு சுறுசுறுப்பாக இயங்கியது.



# கடுப்பில் மஹிந்த...

மொட்டு கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்காவையே நிறுத்த வேண்டும் என்ற நிலைப்பாட்டில் பசில் ராஜபக்ச உள்ளார்.

ஆனால்இமஹிந்தவோ இந்த விடயத்தில் அமைதியாக உள்ளார்.இப்போதே வேட்பாளர் யாரென்று கூறுவதற்கு அவருக்கு விருப்பமில்லை.

இதனால்இஇது தொடர்பில் கட்சி உத்தியோகபூர்வ முடிவை எடுக்கும்வரை கட்சி உறுப்பினர்கள் எவரும் எதுவும் கூறக்கூடாது.

நீங்கள் யாரை விரும்பி இருந்தாலும் அதை வெளியே சொல்லக்கூடாது என்று மொட்டு கட்சி உறுப்பினர்களுக்கு கடுமையான உத்தரவைப் பிறப்பித்துள்ளார் மஹிந்த ராஜபக்ச.

ஆனால்இஅந்த உத்தரவை மீறி வருகிறார் பிரசன்ன ரணதுங்க.மொட்டு கட்சியின் வேட்பாளராக ரணிலையே நிறுத்த வேண்டும் என்று கூறி வருகிறார்.

இதனால் பிரசன்னமீது கடும் கடுப்பில் உள்ளாராம் மஹிந்த.



# பசில்-சமல் அதிருப்தி

நாமல் ராஜபக்ச தேசிய அமைப்பாளராக நியமிக்கப்பட்ட அந்தக் கூட்டத்தில் பசில் ராஜபக்சவும் சமல் ராஜபக்சவும் கடும் சோகமாகக் காணப்பட்டார்கள்.

அதற்கு காரணம் நாமல் தேசிய அமைப்பாளராக நியமிக்கப்பட்டமைதான்.

ராஜபக்ச சகோதரர்கள் யாரும் இந்தப் பதவிக்கு நியமிக்கப்படக்கூடாது என்று சமல் எவ்வளவு எடுத்துக் கூறியும் நாமலை நியமித்துவிட்டார்களே என்ற கவலைதான் அவருக்கு.

இந்த விவகாரம் தொடர்பில் ஜனாதிபதியை சுற்றியுள்ள ஐக்கிய தேசிய கட்சி முக்கியஸ்தர்கள் சிலர் கூடிப் பேசினர்.

நாமலின் இந்த நியமனம் காரணமாக மொட்டு கட்சிக்குள் பிளவு ஒன்று ஏற்பட்டுள்ளது.நாம் இதில் கவனமாக இருக்க வேண்டும்.ஜனாதிபதி தேர்தல் வருவதால் இரண்டு அணிகளும் எமக்குத் தேவை.நாம் இரண்டு தரப்பையும் அணைத்துக்கொண்டு நடுநிலையாக செல்ல வேண்டும் என்று அவர்கள் முடிவெடுத்தனர்.

# HNB மற்றும் ICC இணைந்து வீட்டு நிதியுதவி



தங்களது கனவு இல்லத்திற்காக முதலீடு செய்யும் வாடிக்கையாளர்களுக்கு சிறந்த ஒப்பந்தங்களை வழங்குவதற்கான தனது முயற்சிகளை மீண்டும் வலியுறுத்தி, இலங்கையின் முன்னணி தனியார் துறை வங்கியான HNB PLC, International Construction Consortium (PVT) Ltd (ICC) உடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றை மேற்கொண்டுள்ளது.

இலங்கையின் தலைநகரில் அமைந்துள்ள கட்டுமானத்தின் சமீபத்திய திட்டமான The Residencies Kotte இன் எதிர்கால வீட்டு உரிமையாளர்களுக்கு பிரத்தியேக நிதி தீர்வுகளை வழங்குகின்றன.

HNBஇன் பிரதி பொதுமுகாமையாளர் – தனிப்பட்ட நிதி சேவைகள், காஞ்சன கருணாகம மற்றும் ICCஇன் முகாமைத்துவப் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான நாமல் பீரிஸ் ஆகியோரின் பங்கேற்புடன், ICC தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற விசேட நிகழ்வில், இரு நிறுவனங்களின் மேலதிக பிரதிநிதிகளின் பங்களிப்புடன் இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

கூட்டாண்மை குறித்து கருத்து தெரிவித்த HNBஇன் பிரதி பொது முகாமையாளர் – தனிப்பட்ட நிதி சேவைகள், காஞ்சன கருணாகம, “ICCAடன் இணைந்து வீட்டு உரிமையை மேம்படுத்துவதற்கான எங்கள் உறுதிப்பாட்டை விரிவுபடுத்துவதில் பெருமிதம் கொள்கிறோம். கட்டுமானத்தில் ICCயின் நிபுணத்துவத்துடன் இணைந்து, வீட்டு உரிமைக்கான பயணத்தை தடையின்றி மற்றும் நிறைவாக மாற்ற நாங்கள் அர்ப்பணித்துள்ளோம்.” என தெரிவித்தார்.

# பெண்களின் சக்தியை கொண்டாடும் சியபத

இந்த சர்வதேச மகளிர் தினத்தில் அதன் ஆழமான விழுமியங்களை வெளிச்சத்திற்கு கொண்டு வரும் வகையில், சியபத பினான்ஸ் பிஎல்சி நாடு முழுவதும் உள்ள பெண்களின் கூட்டுப் பலம், சக்தி மற்றும் அவர்களது சாதனையைக் கொண்டாட ஒன்றாக இணைந்தது.

தலைமைப் பொறுப்பை ஏற்பதில் பெண்களின் பங்களிப்பை மேம்படுத்தும் வகையில், சியபத பினான்ஸ் பிஎல்சி, புகழ்பெற்ற கூட்டாண்மை மற்றும் தனிப்பட்ட பயிற்சியாளர் இருஷி அலுவிஹாரே அவர்களால் ““உயர்வு, பிரகாசம், மற்றும் செழிப்பு“ என்ற தொனிப்பொருளின் கீழ் ஒரு சிறப்புச் செயலமர்வை நடத்தியது..

சியபத பினான்ஸ் பிஎல்சி, உள்ளூர் நிறுவனத் துறையில் பல ஆண்டுகளாகச் செயல்பட்டு வந்துள்ளதோடு, செழிப்பானதொரு பணிச்சூழலை தம் பணியாளர்களுக்கு வழங்குகிறது.

மேலும் தடைகளைத் தகர்த்தெறிந்து, நாட்டின் எதிர்காலத்தை மறுவடிவமைக்க, பெண்களுக்கு முழுமையான சுதந்திரத்தை வழங்கி அவர்களை பெருமைப்படுத்துவதை தொடக்கத்திலிருந்தே மேற்கொண்டு வருகிறது.

தொழில்துறையில் உள்ள தலைவர்களுக்கு ஒரு முன்மாதிரியாக, நிறுவனம் தனது கொள்கைக்கு ஏற்ப அனைத்து தரங்களிலும் தனது ஊழியர்களில் 40மூ பெண்களின் பிரதிநிதித்துவத்தை கொண்டுள்ளது.

ஊடக தொடர்புகளுக்கு :
பெயர்ஃபதவி: சம்பிகா தல்கொடபிடிய
முகாமையாளர் –மக்கள் தொடர்புகள்
மொபைல் எண்:: 0773 856 757



# DFCC இற்கு மூன்று விருதுகள்



Institute of Chartered Professional Managers of Sri Lanka (CPM) இன் ஏற்பாட்டில் அண்மையில் இடம்பெற்ற CPM Best Management Practices Company Awards 2024 விருதுகள் நிகழ்வில் ஒட்டுமொத்த வெற்றியாளர் – தங்கம் என்ற விருதை னுகுஊஊ வங்கி தனதாக்கியுள்ளது.

இந்த உச்ச ஸ்தானத்திற்குப் புறம்பாக, வங்கியின் மூலோபாய நிலைபேறாண்மை வேலைத்திட்டத்திற்கு அமைவாக, வங்கி தனது கிளை வலையமைப்பு முழுவதுமாக முன்னெடுத்த காகிதம் இன்றி செயல்பாடுகளை மேற்கொள்ளும் முயற்சிக்காக வங்கித் துறையின் வெற்றியாளர் – தனியார் துறைப் பிரிவு மற்றும் மிகச் சிறந்த முகாமைத்துவ நடைமுறைக்கான மகத்துவத்திற்கான விருது ஆகியவற்றையும் DFCC வங்கி வென்றுள்ளது.

அசங்க உடுவல – பிரதம செயல்பாட்டு அதிகாரி, நில்மினி குணரட்ன – உப தலைவர், சந்தைப்படுத்தல் மற்றும் நிலைபேறாண்மை தலைமை அதிகாரி, மற்றும் நளின் கருணாதிலக – உப தலைவர், நிலைபேறாண்மை ஆகியோர் அடங்கிய குழுவினர் னுகுஊஊ வங்கியின் சார்பில் இவ்விருதுகளைப் பெற்றுக்கொண்டனர்.

2030 ஆம் ஆண்டில் காபன் நடுநிலை வகிக்கும் வங்கியாக மாற வேண்டும் என்ற தனது நோக்கத்தினூடாக, நேர்மறை சமூக மற்றும் சூழல் மாற்றத்தை முன்னெடுத்துச் செல்வதில் DFCC வங்கியின் அர்ப்பணிப்பை பெருமதிப்பு மிக்க இவ்விருதுகள் பிரதிபலிக்கின்றன.

# Sunshineஇன் புதிய தலைமைத்துவ அணி



சன்ஷைன் ஹோல்டிங்ஸ் பிஎல்சி புதிய தலைமைத்துவ நியமனங்களை அண்மையில் அறிவித்துள்ளது.

இதன்படி, குழுமத்தின் செயற்குழுவின் நிறைவேற்றுப் பணிப்பாளர்களாக அருண தீப்திகுமார, மிச்செல் சேனாநாயக்க, கலாநிதி ரி. சயந்தன் மற்றும் சாந்த பண்டார ஆகியோரை சன்ஷைன் ஹோல்டிங்ஸ் நியமித்துள்ளது.

இந்த புதிய நியமனங்கள் குறித்து கருத்து தெரிவித்த சன்ஷைன் ஹோல்டிங்ஸ் குழுமத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஷியாம் சதாசிவம், “எமது குழுமத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர்களாக அருண தீப்திகுமார, மிச்செல் சேனாநாயக்க, கலாநிதி ரி. சயந்தன் மற்றும் சாந்த பண்டார ஆகியோரை நியமிப்பதில் நாங்கள் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம்.

அவர்களின் அனுபவம், மூலோபாய திறன்கள் மற்றும் அர்ப்பணிப்பு ஆகியவை சன்ஷைன் ஹோல்டிங்ஸின் வெற்றிக்கு முக்கியமானவை.

அவர்களின் தலைமையின் மூலம், சன்ஷைன் ஹோல்டிங்ஸ், எமது அனைத்து பங்குதாரர்களுக்கும் சிறந்த சேவையை வழங்கும் ஒரு முன்னணி வணிகமாகத் முன்னேறிச் செல்லும் என்று நான் நம்புகிறேன்.” என தெரிவித்தார்.

# நாம் முன்னெடுக்கும் பாதைகள் அறிமுகம்

“நாம் முன்னெடுக்கும் பாதைகள்” EUNIC இலங்கை மற்றும் Good Life X இணைந்து முன்னெடுக்கும் திட்டமாகும்.

EUNIC – ஐரோப்பிய ஒன்றியத்தின் கலாசாரத்திற்கான தேசிய நிறுவனங்கள் – ஐரோப்பிய ஒன்றியத்தின் 36 அங்கத்துவ நாடுகளின் தேசிய கலாசார நிறுவனங்களை உள்ளடக்கிய ஒன்றியமாகும்.

EUNIC இலங்கை – இலங்கையிலுள்ள Alliance Française மற்றும் பிரான்ஸ் தூதரகம் மற்றும் மாலத்தீவுகள், கோயித் நிறுவனம், பிரிட்டிஷ் கவுன்சில். சுவிஸ் தூதரகம், நெதர்லாந்து ராஜ்ஜிய தூ தரகம், இத்தாலியின் தூதரகம் மற்றும் நுருவின் அனுசரணையுடன் கலாசார உறவுகள் மற்றும் படைப்பாற்றல் மற்றும் வெவ்வேறுபட்ட மக்களை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த அணுகுமுறையை கையாளுகின்றனர்.

Good Life X, மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் கலாசாரத்திற்கான தேசிய நிறுவனங்கள் (EUNIC), – இலங்கையின் முதன்முறையாக படைப்பாற்றல் மிக்க கலைஞர்களை – தனிநபர்கள், நிறுவனங்கள், அல்லது வியாபாரங்கள் பற்றிய தகவல்களை திரட்டி ஆவணப்படுத்தி டிஜிட்டல் மற்றும் அச்சிடப்பட்ட வரைபடத்தில் குறிப்பிடப்படுவார்கள்.

இக் கலைஞர்களை அவர்களின் பணிமுறைகள் மற்றும் நீடிப்புத்திறன், சுழற்சி முறை, சகவாழ்வு முறைகள் மூலம் மக்களும் பூமியுடன் தொடர்புட்ட தலைப்புகளாக இருக்க வேண்டும். ”நாம் முன்னெடுக்கும் பாதைகள்” எனும் திட்டமானது பெருகிவரும் சுற்றுச்சூழல் பிரச்சினைகள் மற்றும் படைப்பாளிகளின் பங்கை தீர்வாக முன்வைக்கும் திட்டமாகும்.



# ரூபாவின் பெறுமதி உயர்வு: நடவடிக்கை எடுக்க வேண்டும்

ஏற்றுமதியாளர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு கூட்டு அமைப்பாக, இலங்கை எதிர்கொள்ளும் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியிலும் வேலைவாய்ப்பைப் பாதுகாக்கவும், நிலையான அந்நியச் செலாவணியை நாட்டுக்குள் கொண்டு வருவதையும் உறுதி செய்வதில் இலங்கை ஏற்றுமதியாளர்கள் சங்கம் முக்கியப் பங்காற்றி வருகிறது.

இலங்கை ஏற்றுமதியாளர்கள் சங்கத்தில் அங்கம் வகிக்கும் ஏற்றுமதியாளர்கள், நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 13மூ ஆக இருக்கும் பெரும்பாலான சரக்கு ஏற்றுமதிகளை பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர்.

அமெரிக்க டொலருக்கு நிகரான ரூபாவின் பெறுமதி அதிகரிப்பு, வங்கிகளுக்கிடையிலான வெளிநாட்டு நாணயப் பரிமாற்றத்தை கட்டுப்படுத்துதல் மற்றும் வருமானத்தை இலங்கை ரூபாவாக மாற்றுதல் போன்ற ஏற்றுமதியாளர்கள் எதிர்நோக்கும் சவால்களுக்கு தீர்வுகாணுமாறு இலங்கை ஏற்றுமதியாளர்கள் சங்கம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

ரூபாவின் மதிப்பு உயர்வு பல்வேறு வழிகளில் ஏற்றுமதி வர்த்தகத்தில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதாக அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை ரூபாவின் பெறுமதியானது சர்வதேச கொள்வனவாளர்களுக்கு ஏற்றுமதி பொருட்களை அதிக விலைக்கு கொண்டு செல்லும் எனவும், இது உலக சந்தையின் போட்டித்தன்மையை நேரடியாக பாதிக்கும் எனவும் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

மே 2022 இல், ரூபாவின் மதிப்பு அமெரிக்க டொலர் ஒன்றுக்கு ரூ. 364 ஆக இருந்தது, இது செலாவணி விகித மாற்றங்களால் ஏற்றுமதியாளர்களின் செயற்பாட்டுச் செலவுகளையும் அதிகரித்தது. நாட்டில் அதிகரித்துள்ள பணவீக்கத்திற்கு ஏற்ப ஏற்றுமதியின் விலையை சரி செய்ய வேண்டியிருந்தது என்றும் ஏற்றுமதியாளர்கள் கூறுகின்றனர்.

# 'Worky' இலங்கையின் தொழில் சந்தையை மாற்றியமைக்கும் ஒரு புரட்சிகர செயலி

இலங்கை சவாலான பொருளாதார நிலையொன்றை முகங்கொடுத்துள்ள இக்காலத்தில், வேலைவாய்ப்பு மற்றும் சேவைகள் வழங்கல் மற்றும் பெறுதல் வழிமுறைகளில் குறிப்பிடத்தக்க சக்தியாக, 'Worky' என்ற பெயரில் ஒரு புதிய தளம் ஆரம்பமாகியுள்ளது.

வேலை தேடுவோர், பகுதிநேர தொழிலாளர்கள், மாணவர்கள், இடையே உள்ள இடைவெளியைக் குறைக்க வடிவமைக்கப்பட்டுள்ளது. மேலும், நுழசமல இலங்கையில் மக்கள் வேலை தேடும் மற்றும் சேவைகளுக்கு அமர்த்தும் விதத்தில் புரட்சியை ஏற்படுத்த தயாராக உள்ளது.

"Worky' என்பது ஒரு இருப்பிடத்தினை அடிப்படையாக கொண்ட சேவை தளமாகும்,இந்த அப்பில் வேலை தேடுபவர்கள், பகுதி நேர பணியாளர்கள் உட்பட பலதரப்பட்ட துறைசார்ந்தோர்கள் இலவசமாக பதிவு செய்யலாம்.

இந்த புதுமையான பயன்பாடு, சேவை தேடுபவர்களுக்கு உள்நுழையவும், அருகிலுள்ள பணியாளரைக் கண்டறியவும் உதவுகிறது, இது பரந்த அளவிலான சேவைகளுக்கு உடனடி முன்பதிவுகளை எளிதாக்குகிறது.

நெசவுத் தொழிலாளர் மற்றும் தச்சர் போன்ற பாரம்பரிய தொழில்கள் தொடக்கம் செல்லப்பிராணிகளை வளர்ப்பது போன்ற நவீனகால செயல்பாடுகள் வரை, "Worky" அப்பின் ஊடாக தமக்குரிய பணிகளை நிறைவேற்ற தேவையான தொழிலாளர்களை இனங்கண்டு அணுகலாம்.

# Global Soundbar சந்தையில் ஒரு தசாப்தத்தின் தலைமைத்துவத்தைக் கொண்டாடும் Samsung





Samsung Electronics, 2014 முதல் 2023 வரையான தொடர்ச்சியாக பத்து ஆண்டுகளாக, Global Soundbar சந்தையில் முன்னணியில் பயணித்துள்ள தனது சாதனையை பெருமையுடன் அறிவித்துள்ளது.

இந்த குறிப்பிடத்தக்க மைல்கல் பிப்ரவரி 28 அன்று வெளியிடப்பட்ட FutureSource Consulting இன் சமீபத்திய வருடாந்திர அறிக்கையால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. புத்தாக்கம் மற்றும் தரத்தில் Samsungஇன் அசைக்க முடியாத அர்ப்பணிப்பு அதன் ஆதிக்கத்தை 20.3% சந்தைப் பங்கு மற்றும் 2023 இல் தொழில்துறையின் விற்பனை அளவில் ஈர்க்கக்கூடிய 18.8% பங்களிப்பைக் கொண்டுள்ளது.

கடந்த தசாப்தத்தில், Samsung வீட்டு பொழுதுபோக்கு அமைப்புகளில் தொடர்ந்து புதிய தரநிலைகளை அமைத்துள்ளது, அதன் சிறந்த ஒலி தரம் மற்றும் புத்தாக்கமான கண்டுபிடிப்புகளுக்காக பாராட்டையும் பெற்றுள்ளது.

Q-Symphony மற்றும் SpaceFit Sound போன்ற முன்னோடியான அம்சங்கள் செவிப்புலன் அனுபவத்தை மறுவரையறை செய்துள்ளன, பாவனையாளர்களுக்கு அவர்களின் சுற்றுப்புறங்களுக்கு நேர்த்தியாக வரநெ செய்யப்பட்ட அதிவேக ஒலிக்காட்சியை வழங்குகிறது.

சிறந்து விளங்குவதற்கான இந்த அர்ப்பணிப்பு, தொழில் நிபுணர்கள் மற்றும் விமர்சகர்களிடமிருந்து அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது.



# Prime Group இன் Keys to Paradise

இலங்கையின் முன்னணி ரியல் எஸ்டேட் வடிவமைப்பாளரான Prime Group, தனது நவீன வசதிகள் படைத்த The Beach Front II Uswetakeiyawa சொகுசு குடியிருப்புத் தொகுதியின் நிர்மாணப் பணிகளை வெற்றிகரமாக பூர்த்தி செய்து அதன் உரிமையாளர்களிடம் கையளித்துள்ளதாக அறிவித்துள்ளது.

2024 மார்ச் 02 ஆம் திகதி "Keys to Paradise" எனும் தலைப்பில் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த கடற்கரைக்கு முகப்பாக அமைந்த சொகுசு தொடர்மனைத் தொகுதியின் பெருமைக்குரிய உரிமையாளர்களுக்கு இதன் போது அவர்களின் இல்லங்களுக்கான சாவிகள் கையளிக்கப்பட்டிருந்தன.

இந்த நிகழ்வின் போது இந்த தொடர்மனையின் சிறப்பான வடிவமைப்பு மற்றும் நிர்மாணம் போன்ற விடயங்கள் மாத்திரமன்றி, அதனை வடிவமைக்கும் போது தமது பெறுமதி வாய்ந்த வாடிக்கையாளர்களுடன் Prime Group கட்டியெழுப்பியிருந்த உறுதியான உறவுகள் தொடர்பிலும் ஆராயப்பட்டிருந்தது.

கொழும்பிலிருந்து 20 நிமிடங்களில் பயணிக்கக்கூடிய வகையில் அமைந்துள்ள சொகுசு தொடர்மனை "The Key to Paradise" இன் வெற்றியானது இலங்கையில் கடற்கரையோரத்தில் வாழ்வதற்கான ஒரு புதிய பரிணாமத்தை ஏற்படுத்தியுள்ளது.

2020 ஆகஸ்ட் மாதத்தில் Beach Front II Uswetakeiyawa நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. இன்று உஸ்வெட்டகெய்யாவ பிரதேசத்தில் காணப்படும் தங்கமான மணல் மற்றும் பாம் தாவரப் பகுதியில் சொகுசான வாழிடத்தை வழங்குவதாக அமைந்துள்ளது.

16 மாடிகளைக் கொண்ட பிரம்மிக்க வைக்கும் கட்டடக்கலை அம்சங்களைக் கொண்ட இந்தத் தொகுதியில் 108 அலகுகளில் ஒன்று மற்றும் இரண்டு படுக்கையறைகளைக் கொண்ட இல்லங்கள் மற்றும் பென்ட்ஹவுஸ்கள் ஆகியன 742 முதல் 2273 சதுர அடிப் பரப்பளவுகளில் காணப்படுகின்றன.



# சர்வதேச அங்கீகாரம் பெற்ற பகுப்பாய்வு சேவைகள் அறிமுகம்

இலங்கையின் முன்னணி ஒட்டுமொத்த கழிவு முகாமைத்துவ தீர்வுகள் சேவை வழங்குனரான ஐளேநுநு நுஉழஉலஉடந, சுற்றுச்சூழல் நிலைபேற்றியல் மற்றும் ஒழுங்குமுறை இணக்கத்திற்கு முன்னுரிமை கொடுக்கும் கைத்தொழில்களுக்கான அதிநவீன பகுப்பாய்வு ஆய்வகத்தை அமைப்பதன் மூலம் தனது சேவை வரிசையை விரிவுபடுத்தியுள்ளது.

புதிதாக நிறுவப்பட்ட ஆய்வகம் கழிவு நீர் சோதனை, சேதன உர சோதனை, எரிபொருள் சோதனை, கன உலோக பகுப்பாய்வு மற்றும் கழிவு பகுப்பாய்வு உள்ளிட்ட விரிவான பகுப்பாய்வு சேவைகளை வழங்குகிறது.

இந்த சேவைகள் தொழில்துறைகளுக்கு அவற்றின் பகுப்பாய்வுத் தேவைகளுக்கு துல்லியமான, நம்பகமான மற்றும் அங்கீகாரம் பெற்ற தீர்வுகளை வழங்குவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளன.

"எமது பகுப்பாய்வு ஆய்வகம் மதிப்புமிக்க ஐளுழு 17025 தரச்சான்று அங்கீகாரத்தைப் பெற்றுள்ளதுடன், இது சர்வதேச தரம் மற்றும் துல்லியமான தரத்தை நாங்கள் கடைப்பிடிப்பதை அங்கீகரித்துள்ளது," என்று ஐளேநுநு நுஉழஉலஉடந இன் பொது முகாமையாளர் சுஜித் குணவர்தன அவர்கள் குறிப்பிட்டார்.

"நிலைபேண்தகு வளர்ச்சி மற்றும் சுற்றுச்சூழல் இணக்கத்திற்கான முயற்சிகளில் தொழில்துறைகளுக்கு உதவுவதற்காக, அதிநவீன சுற்றுச்சூழல் தீர்வுகளை வழங்கும் எமது முயற்சியில் இது குறிப்பிடத்தக்கதொரு சாதனையாக அமைந்துள்ளது," என்று அவர் தொடர்ந்தும் குறிப்பிட்டார்.

# புனித உம்ரா மற்றும் சுற்றுலா மன்றம் நாளை மதீனாவில்





(காலித் ரிஸ்வான்)

உம்ரா யாத்திரை மற்றும் சவூதிக்கான வருகைகள் தொடர்பான தொடக்க மன்றம் ஒன்றை வருகின்ற ஏப்ரல் மாதம் 22ஆம் திகதி நாளை நடாத்த, சவூதி அரேபிய ஹஜ் உம்ரா அமைச்சகம் தீர்மானித்துள்ளது.

மதீனா பிராந்திய ஆளுநரான இளவரசர் சல்மான் பின் சுல்தான் பின் அப்துல் அஸீஸ் தலைமையில், மன்னர் சல்மான் சர்வதேச மாநாட்டு மையத்தில் இம் மன்றம் நடைபெறவுள்ளது.

சவூதி அரேபியாவிற்கு உம்ராவுக்காகவும் பயணிகளாகவும் வருகின்ற சர்வதேச மற்றும் உள்நாட்டு மக்களின் அனுபவத்தை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட முன்முயற்சிகள் மற்றும் சேவைகளை இம் மன்றம் எடுத்துக் காண்பிக்கவுள்ளது.

இது சவூதி அரேபியாவின் விஷன் 2030 திடடத்தின் இலக்குகளை அடைவதன் ஒரு பகுதியாக இருப்பதோடு அதிக எண்ணிக்கையிலான உம்ரா யாத்திரிகர்கள் மற்றும் பார்வையாளர்கள் மக்கா மற்றும் மதீனா நகரங்களிற்கு ஈர்த்து அவர்களுக்கு சிறந்த பயண அனுபவத்தை வழங்குவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

பயண முகமையாளர்கள், புனித ஹஜ் உம்ரா யாத்திரை மற்றும் சுற்றுலா நிறுவனங்கள் மற்றும் காப்பீடு, சுகாதாரம், போக்குவரத்து மற்றும் தொழில்நுட்பம் ஆகியவை உள்ளடங்களான அரச நிறுவனங்கள் மற்றும் தனியார் துறையினர் போன்ற பலர் இம்மன்றத்தில் பங்கேற்கவுள்ளனர்.

உம்ரா யாத்திரிகர்கள் மற்றும் ஏனைய பார்வையாளர்களின் அனுபவத்தை மேம்படுத்துவதற்காக உம்ரா மற்றும் சுற்றுலாத் துறையில் உள்ள சிறப்பான விடயங்களை இம் மன்றம் எடுத்துக் காட்டுவதோடு, இது பயணிகளது தேவைகளை பூர்த்தி செய்யும் திட்டங்கள், சேவைகளின் தரத்தை உருதிப்படுத்தல் போன்ற விடயங்களில் கவனம் செலுத்துவதாக அமையும்.

இத்திட்டமானது சவூதி அரேபியாவை நோக்கி வரும் உம்ரா மற்றும் சுற்றுலாப் பயணிகளின் சவூதியிலான அனுபவத்தை சிறந்த விதத்தில் அமைத்துக் கொடுக்க வேண்டும் என்ற அந்நாட்டுத் தலைமைகளின் ஆர்வத்திற்கான எடுத்துக்காட்டாக அமைகிறது.

# செலானின் நெல் கடன்



அபிவிருத்தி நிதித் திணைக்களத்தின் நெல் கொள்வனவுக்கான புதிய கடன் திட்டத்தை வழங்கும் நிதி நிறுவனங்களில் ஒன்றாக செலான் வங்கி தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த முன்முயற்சி நெல் ஆலைகள், தொகை நெல் சேகரிப்பாளர்கள் மற்றும் நெற் களஞ்சியசாலை உரிமையாளர்களுக்கு அணுகக்கூடிய நிதி உதவியை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளதுடன் SME துறையை குறிப்பிடத்தக்க அளவு வலுவூட்டவும் அதன் மேம்பாட்டிற்கும் பங்களிக்கும்.

நெல் ஆலைகள், தொகை நெல் சேகரிப்பாளர்கள் மற்றும் களஞ்சியசாலை உரிமையாளர்களின் நிதித் தேவைகளை நிவர்த்தி செய்யவும், பொருளாதாரத்திற்கு பங்களிக்கும் திறனை மேம்படுத்தவும் இந்நெற் கடன் திட்டம் பெப்ரவரி 1, 2024 முதல் ஏப்ரல் 30, 2024 வரை அமுலில் இருக்கும்.

பொருளாதார வளர்ச்சியை ஊக்குவித்தல் மற்றும் சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு (SMEs) ஆதரவளிக்கும் வங்கியின் அர்ப்பணிப்பை அங்கீகரிக்கும் வகையில் இந்த முயற்சிக்கான பங்குதாரர் வங்கியாக செலான் வங்கி தேர்ந்தெடுக்கப்பட் டுள்ளது.

நெற் கடன் திட்டத்தின் முக்கிய அம்சங்களாக 11% வட்டி வீதம் மற்றும் 6 மாதங்கள் வரையான திருப்பிச் செலுத்தும் கால அவகாசம் ஆகியவை உள்ளடங்கும்.



குன்று ஏறல் நிகழ்வை முன்னெடுக்க

# ஹேமாஸ், AYATI Sports Club உடன் கைகோர்ப்பு

உலக மனநலிவு நோய் மாதத்தை குறிக்கும் வகையில், ஹேமாஸ் அவுட்ரீச் மையம், Ayati Sports Club உடன் கைகோர்த்து பிரத்தியேகமான மற்றும் உள்ளடக்கமான குன்று ஏறல் நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தது.

இந்தத் நிகழ்வினூடாக, மனநலிவுடைய இளம் பராயத்தினர் மற்றும் இதர விருத்தியாகும் நிலைகளைக் கொண்டவர்களுக்கு விளையாட்டு செயற்பாட்டில் பாதுகாக ஈடுபடும் சூழல் ஏற்படுத்தப்பட்டிருந்ததுடன், வலுவான சூழலும் வழங்கப்பட்டிருந்தது.

யுலயவை இலிருந்து அர்ப்பணிப்பான அணியினர் இந்நிகழ்வில் கலந்து கொண்டதுடன், குன்று ஏறும் செயற்பாட்டில் பங்குபற்றுநர்கள் ஆர்வத்துடன் ஈடுபட்டதை அவதானிக்க முடிந்தது.

உடல் ரீதியான சவால்களுக்கு மத்தியில், குன்று ஏறல் என்பது பல்வேறு அனுகூலங்களை வழங்குகின்றது. பிரச்சனைகளை தீர்க்கும் திறன்கள் மற்றும் மொழி, பேச்சாற்றல் விருத்தியை வழங்குவதாக அமைந்துள்ளது.

அத்துடன், உள, உடல்சார் மற்றும் ஒழுங்கிணைப்பு திறன்களை பெற்றுக் கொடுப்பதாகவும் அமைந்துள்ளது.

எவரெஸ்ட் சிகரத்தை அடைந்த இலங்கையின் முதலாவது நபரான ஜயந்தி குரு-உதும்பலா இந்நிகழ்வில் கலந்து கொண்டார். அவருடன், Climblanka பிரதிநிதிகளும் பங்கேற்று, பங்குபற்றுநர்களுக்கு பாதுகாப்பான மற்றும் இனிய அனுபவம் கிடைப்பதை உறுதி செய்திருந்தனர்.

# கலா பொல 2024




இலங்கையில் வருடாந்தம் இடம்பெற்றுவருகின்ற திறந்தவெளி ஓவியச் சந்தையான கலா பொல 2024, 2024 பெப்ரவரி 18 அன்று கொழும்பு 7, ஆனந்த குமாரசுவாமி வீதியோரத்தில் இடம்பெற்றுள்ளதுடன், ஓவியர்கள் மற்றும் பார்வையாளர்கள் என இரு தரப்பினருக்கும் வெற்றியை ஈட்டித்தந்து, ஒப்பந்த அடிப்படையிலான ஓவியப்படைப்புக்கள் நீங்கலாக, அண்ணளவாக ரூபா 51 மில்லியன் விற்பனையைத் தோற்றுவித்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

31வது ஆண்டை எட்டியுள்ள கலா பொல நிகழ்வானது, ஓவியர்களும், சிற்பிகளும் தமது திறமைகளை வெளிக்கொணர்ந்து, கொள்வனவாளர்கள், துறை சார் வல்லுனர்கள், மற்றும் கலைஞர்கள் சமூகம் ஆகியோருடன் தொடர்புகளை உருவாக்கிக் கொள்ள இடமளித்து வருகின்ற இலங்கையின் மிகப் பாரிய மற்றும் மிக நீண்ட காலமாக இடம்பெற்று வருகின்ற கலை மேடையாகும்.

ஜோர்ஜ் கீற் நிதியம் (George Keyt Foundation - GKF) மற்றும் ஜோன் கீல்ஸ் குழுமம் ஆகியவற்றுடனான நீண்டகால ஒத்துழைப்புடன், இந்நிகழ்வு பலத்த வரவேற்பைப் பெற்றிருந்ததுடன், 368 கலைஞர்களையும், கிட்டத்தட்ட 38,000 பார்வையாளர்களையும் (நிகழ்வு இடத்திற்கு வருகை தந்தவர்கள் மற்றும் வருகை தந்த வாகனங்கள் அடங்கலாக) ஈர்த்துள்ளது.

இந்த உத்தியோகபூர்வ வைபவத்தின் பிரதம அதிதியாக இலங்கைக்கான இந்தியத் தூதுவர் மேன்மைதங்கிய சந்தோஷ் ஜா அவர்கள் கலந்து சிறப்பித்ததுடன், ஜோர்ஜ் கீற் நிதியத்தின் (GKF) தலைவர் திரு. மாலக தல்வத்த, புமுகு அறக்கட்டளையின் அங்கத்தவர்கள், ஜோன் கீல்ஸ் குழுமத்தின் தலைவர் திரு. கிறிஷான் பாலேந்திரா, மற்றும் இக்குழுமத்தின் சிரேஷ்ட முகாமைத்துவ அங்கத்தவர்களும் இணைந்து கொண்டனர்.